இலஞ்சம் தவிர்

களம் -21

நெஞ்சம் நிமிர்

வெற்றி -02

# நேர்மை நெறி

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்) பிப்ரவரி 2023


(NERMAI NERI) (Reg.No.349/2001)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கு

₹ 10

## இல்லாதவனும் கை ஏந்துகிறான்
## இருப்பவனும் கை ஏந்துகிறான்




## ஊழல் நம் நாட்டின் சாபம்

**PUBLISHED BY**

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, "நம்பகம்",

கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023

Cell:8778312823

e-mail:acmchennai2001@yahoo.co.in

website:anticorruptionchennai.com

<u>நேர்மையானவர்கள் வாழ்வில் சில சம்பவங்கள்</u>

## பதவிக்கு மரியாதை

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் காங்கிரஸ் மகாசபைக்கு (இந்திய தேசிய காங்கிரஸ்} ஜவஹர்லால் நேரு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். மகாசபையில் நேருவை விட வயதிலும் அனுபவத்திலும் மூத்த பல தலைவர்கள் இருந்தனர். ஒரு நாள் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு தொடங்கியது.

காந்திஜி உள்பட எல்லா தலைவர்களும் முன்னதாகவே மாநாட்டுப் பந்தலுக்கு வந்து விட்டனர். ஆனால் தலைவரான ஜவஹர்லால் நேரு சில அவசர வேலைகளை முடித்துவிட்டு சற்று தாமதமாக வந்தார். அவர் பந்தலுக்குலள் நுழைந்ததும் காந்திஜி உள்பட பல தலைவர்களும் எழுந்து நின்றனர் காந்திஜியின் அருகே இருந்த ஒருவர், "நேருஜி உங்களைவிட வயதில் இளையவர். அதனால் நீங்கள் எழுந்திருக்க வேண்டுமா?" என்று கேட்டார்.

அதற்குக் காந்திஜி , " நேருஜிக்கு வயது குறைவாக இருக்கலாம்: ஆனால் அவர் இப்போது நமக்கெல்லாம் தலைவராக இருக்கிறார். அவர் மட்டுமல்ல.... எந்த வயதில் இருப்பவர் தலைவர் பதவி ஏற்றாலும், அது எல்லா வயதையும் கடந்து மரியாதைக்குரியது. நாம் கண்டிப்பாக எழுந்து நின்று அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும்!" , என்றார்.

காந்திஜியின் தன்னடக்கம் கேள்வி கேட்டவரை மெய்சிலிர்க்க வைத்தது.

---

**(சில தவிர்க்க முடியாத காரணங்களால் தலைவர் மடல் இவ்விதழில் இடம் பெறவில்லை: அது அடுத்த இதழில் இடம்பெறும்: எழுத இயலாமைக்கு வருந்துகிறோம்)**

---



# பட்ஜெட் 2023-24 : ஒரு ரூபாயில் வரவு - செலவு எவ்வளவு? அரசு அதிகமாக செலவிடுவது வட்டி கட்டத்தான்!

**வே. கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**

`ஒரு ரூபாயில் வரவு - செலவு எவ்வளவு என்ற விவரம் மத்திய அரசின் பட்ஜெட்டில் விளக்கப்பட்டுள்ளது. மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த பட்ஜெட்டில், ஒரு ரூபாயில் வரவு - செலவு குறித்த விவரம் வெளியாகி உள்ளது. இதில் அதிகபட்சமாக வட்டி செலுத்துவதற்கு 20 பைசாவும், மாநிலங்களுக்கான வரி பகிர்வுக்காக 18 பைசாவும் செலவிடப்படுகிறது. அதிகபட்சமாக கடன்கள் மற்றும் பிற சொத்துகள் மூலமாக 34 பைசாவும், ஜி.எஸ்.டி மற்றும் இதர வரிகள் மூலமாக 17 பைசாவும், வருமான வரி மற்றும் வர்த்தக வரி மூலமாக தலா 15 பைசாவும் வருவாயாக மத்திய அரசுக்கு கிடைக்கிறது.

பட்ஜெட்டில் பல்வேறு அறிவிப்புகள் வெளியாகியிருக்கும் நிலையில், 1 ரூபாயில் வரவு செலவு விவரம் வெளியிடப்பட்டுள்ளது. "நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டை தாக்கல் செய்து உரையாற்றுகையில், இந்தியப் பொருளாதாரம் ஒளிரும் நட்சத்திரம் என்றும், இது தொழிற்துறையினருக்கான பட்ஜெட் என்றும் கூறினார். மேலும், இந்த பட்ஜெட் அடுத்த 100 ஆண்டுகளுக்கான புளூ பிரிண்ட்டாக இருக்கும் என்றும் விவசாய கடன் வழங்க ரூ.20 லட்சம் கோடி கடன் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது உள்பட 7 முக்கிய அம்சங்கள் அடங்கியதாக இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். வரவு - செலவு மேலும், அடுத்த நிதியாண்டில் வரி வருவாய் 23.3 லட்சம் கோடி ரூபாயாக இருக்கும் எனவும் மாநிலங்கள் தங்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.5 சதவீதம் வரை நிதி பற்றாக்குறையை வைத்துக் கொள்ளலாம் எனவும் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். 2022-23ஆம் நிதியாண்டில் வருவாய்க்கும் செலவுக்கும் இடையே உள்ள வித்தியாசம் 16,61,196 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதியமைச்சர் கூறியுள்ளார். நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்த பட்ஜெட்டில், நாட்டின் வரவு - செலவு ஒரு ரூபாயில் விளக்கப்பட்டுள்ளது.

**ஒரு ரூபாயில் வரவு**

**நேர்முக மற்றும் மறைமுக வரிகள் : 58 பைசா**

- வருமான வரி மூலம் (15 பைசா)
- மத்திய வரிகள் (7 பைசா)
- கம்பெனிகள் வரிகள் (15 பைசா)
- கலால் வரி (4 பைசா)
- சரக்கு /சேவை வரி (ஜிஎஸ்டி) (17 பைசா)

| | |
|---|---|
| கடன்கள் மற்றும் இதர வருவாய் மூலம் | : 34 பைசா |
| வரியில்லா வருமானங்கள் | : 6 பைசா |
| கடனில்லா முதலீட்டு வருவாய் மூலம் | : 2 பைசா |


**ஒரு ரூபாயில் செலவு**

| | |
|---|---|
| வட்டி | : 20 பைசா (மிகப்பெரிய செலவு) |
| மாநிலங்களின் வரி பகிர்விற்காக | : 18 பைசா |
| பென்சன் திட்டங்களுக்காக | : 4 பைசா |
| இதர செலவுகளுக்கு | : 8 பைசா |
| நிதி ஆணையம் மற்றும் பிற இதர பரிமாற்றம் | : 9 பைசா |
| மத்திய அரசின் திட்டங்களுக்காக | : 17 பைசா |
| பாதுகாப்புத்துறைக்கு | : 8 பைசா |
| மானியங்களுக்காக | : 7 பைசா |
| மத்திய அரசின் நிதி உதவி மூலம் நடத்தப்படும் திட்டங்களுக்கு | : 9 பைசா |

துறைவாரியாக ஒதுக்கப்பட்ட தொகைகளும், மொத்த வரவு, செலவு, பற்றாக்குறை ஆகியவகை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| . | துறை | ஒதுக்கப்பட நிதி (கோடியில்) |
|---|---|---|
| 1 | சுகாதாரம் | ரூ. 89,155 |
| 2 | விமான போக்குவரத்து | ரூ. 3,113 |
| 3 | பாதுகாப்பு | ரூ. 5,93,537 |
| 4 | கல்வி | ரூ. 1,12,899 |
| 5 | ஊரக வளர்ச்சி | ரூ. 1,59,964 |
| 6 | உள்துறை | ரூ. 1,96,034 |
| 7 | தகவல் தொழில்நுட்பம் | ரூ. 16,549 |
| 8 | ரயில்வே | ரூ. 2,41,267 |
| 9 | நீர் வளத்துறை | ரூ. 97,277 |
| 10 | தொழிலாளர் நலன் | ரூ. 13,221 |
| 11 | சிறு, குறு, நடுத்தர தொழில் | ரூ. 22,137 |
| 12 | எரிசக்தித்துறை | ரூ. 10,222 |
| 13 | குழந்தைகள், மகளிர் நலன் | ரூ. 25,448 |
| 14 | சாலைப் போக்குவரத்து | ரூ. 2,70,434 |
| 15 | உணவு, பொதுவிநியோகம் | ரூ. 2,05,764 |
| 16 | தொலைத்தொடர்பு | ரூ. 1,23,383 |
| 17 | வேளாண்மை | ரூ. 1,25,035 |
| 18 | **மொத்தம்** | **ரூ. 45,03,097** |

| In ₹ crore | 2021-22 (Actuals) | 2022-23 (Budget Estimates) | 2022-23 (Revised Estimates) | 2023-24 (Budget Estimates) |
|---|---|---|---|---|
| Revenue Receipts | 21,69,905 | 22,04,422 | 23,48,413 | 26,32,281 |
| Capital Receipts | 16,23,896 | 17,40,487 | 18,38,819 | 1,870,816 |
| Total Receipts | 37,93,801 | 39,44,909 | 41,87,232 | 45,03,097 |
| Total Expenditure | 37,93,801 | 39,44,909 | 41,87,232 | 45,03,097 |
| Revenue Deficit | 10,31,021 | 9,90,241 | 11,10,546 | 8,69,855 |
| Effective Revenue Deficit | 7,88,375 | 6,72,598 | 7,84,958 | 4,99,867 |
| Fiscal Deficit | 15,84,521 | 16,61,196 | 17,55,319 | 17,86,816 |
| Primary Deficit | 7,79,022 | 7,20,545 | 8,14,668 | 7,06,845 |



# பேனா சின்னம் கடல் சூழலியலைப் பாதிக்குமா?

**திருவள்ளுவர் சிலையைவிட உயரமாகக் கடலுக்குள் கருணாநிதிக்கான பேனா அடையாளச் சின்னம் அமைய உள்ளது! கடலுக்குள் கட்டுமானம் அமைவதால் உண்மையிலேயே சுற்றுச் சூழல் பாதிப்பு உள்ளதா? அல்லது திராவிட எதிர்ப்பின் அம்சமாக எதிர்க்கிறார்களா..? சுற்றுச் சூழல் சொல்லும் உண்மை என்ன?**

தமிழ் மொழிக்கே அடையாளம் தரும் ஒற்றை நபராக கலைஞர் கருணாநிதியை முன்னிலைப் படுத்தும் முயற்சியாக பேனா வடிவ நினைவுச் சின்னம் சென்னை மெரினாவில் அமைப்பதில் இந்த அரசு உறுதி காட்டி வருகிறது. மெரினா கலைஞரின் சமாதியில் இருந்து நேராகச் செல்லும் வகையில், கடலின் நடுவே 134 அடி உயரத்துக்கு அவரது பேனா வடிவ சிலை அமைப்பதற்கான முன்னெடுப்புகளை திமுக அரசு மேற்கொண்டுள்ளது. திருவள்ளுவரை விட மேலானவராக கருணாநிதியை காட்ட நினைக்கும் முயற்சியோ, என்னவோ வள்ளுவர் சிலையை விட ஒரு அடி உயரமாக கருணாநிதியின் பேனா வடிவம், கடலின் நடுவே நிற்கப் போகிறது!

கலைஞர் ஒரு பெரிய தமிழ் படைப்பாளி என்ற வகையில் அவருக்கான நினைவு சின்னமே கூடாது என்பது நியாயமல்ல! ஆனால், கருணாநிதி நினைவிடத்தில் இருந்து 650 மீட்டர் தூரத்திலும், கடற்கரையில் இருந்து 360 மீட்டர் தூரத்திலும் பேனா நினைவுச் சின்னம் அமைக்கப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது. கரையின் மீது 290 மீட்டரும், கடலின் மீது 360 மீட்டர் தூரத்துக்கும் வீணை வடிவில் பாலம் அமைக்கப்பட இருக்கிறது. இதற்கு மொத்தமாக 81 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மெரினா கடற்கரையில் தொடர்ச்சியாகப் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. சென்னைக்கான காலநிலை மாற்ற செயல் திட்ட அறிக்கையானது, “அடுத்த 5 ஆண்டுகளில் கடல் மட்டம் 7 செ.மீ. உயரும். இதனால், சென்னையின் 300 அடி கடற்கரை பகுதிகள் நீருக்குள் மூழ்கிவிடும்” என எச்சரிக்கிறது.

நேப்பியர் பாலம் முதல் கோவளம் வரையிலான கடலோர பகுதிகள் ஆமைகள் முட்டையிட்டு இனப்பெருக்கும் செய்யும் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதாக சூழலியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்! இங்கே கடலில் கட்டுமானங்கள் மேற்கொள்வதால் ஆமைகளின் இனப்பெருக்கம் பாதிக்கப்படுவதுடன், கடல் வளமும் பாதிக்கப்படும் என்றும், கூறுகிறார்கள். நியாயப்படி பார்த்தால் கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிகளின் படி, நிபுணர் குழுவை அமைத்து விதிகளுக்கு மாறாக மெரீனாவில் கட்டுப்பட்டுள்ள அனைத்து கட்டுமானங்களையும் அகற்ற உத்தரவிட வேண்டும் என்றும் சூழலியல் நிபுணர்கள் கூறி வருகின்றனர்.

ஐ.நா.வில் உறுப்பினர்களாக உள்ள 195 நாடுகளைச் சேர்ந்த சுற்றுச்சூழல், பருவநிலை மாறுபாடு நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இணைந்து, ஐ.பி.சி.சி., எனப்படும் அறிக்கையை ஐந்து அல்லது ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடுவார்கள். அதன்படி கடந்த ஆண்டு ஆகஸ்டில் வெளியான அறிக்கையில், சென்னை, தூத்துக்குடி, விசாகப்பட்டிணம், மும்பை என 12 இந்திய நகரங்கள் கடல் மட்டத்தைவிட 3 அடி வரை ஆழத்தில் இருக்கும், அதாவது மூழ்கும் அபாயம் உள்ளது என எச்சரிக்கை மணி அடிக்கிறது. இதையெல்லாம் புறந்தள்ளவிட்டு, மெரினாவில் கடலுக்குள் 134 அடி உயரத்துக்கு பேனா வடிவ நினைவுச் சின்னம் அமைப்பதற்காக ஜீன்-20, 2022 அன்று தமிழ்நாடு பொதுப்பணித்துறை, கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிகளின் அடிப்படையில் அனுமதி கோர, தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் ஒப்புதலும் வழங்கியது.

இதையடுத்து, திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வை மேற்கொள்வதற்கான அனுமதி கோரி, மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்தின் நிபுணர் மதிப்பீட்டுக் குழுவுக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் தமிழ்நாடு பொதுப்பணித் துறை கடிதம் எழுதியது. ஆய்வை மேற்கொள்ள மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதித்தது. திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வை ஏன் மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகமே மேற்கொள்ளவில்லை என்ற கேள்வி சூழலியல் ஆர்வலர்களிடம் இருந்து வெளிப்பட்டு வருகிறது. இந்நிலையில் பொதுமக்கள் கருத்து கேட்டு, சுற்றுச்சூழல் அனுமதி பெற்று, அடுத்த கட்டப் பணியை துவங்க வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்தது ஒரு வகையில் அனைவருக்கும் வியப்பையே ஏற்படுத்தி உள்ளது. பேனா நினைவு சின்னம்

அமைப்பது பற்றி தேசிய கடலோர மண்ட மேலாண்மை ஆணையத்துக்கும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.



கருணாநிதிக்கான பேனா அடையாளச் சின்னம்



வட சென்னையில் கடல் அரிப்பால் சாலையை விழுங்கத் துடிக்கும் கடல் அலைகள்!

கடலோர ஒழுங்குமுறை மண்டல விதி IV(A)யின் கீழ் வரையறுக்கப்பட்ட பகுதிகளில், விதிவிலக்கான நேரங்களில் மட்டுமே நினைவிடங்கள் / நினைவுச் சின்னங்கள் அமைக்கலாம் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. பேனா வடிவ நினைவுச் சின்னம் அப்படியானது அல்ல என்பதைக்கூறி ஆய்வு மேற்கொள்ள சம்மதம் தெரிவிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், மத்திய அரசை அரசியல் தடுத்திருக்கலாம். இது மட்டுமா, மத்திய புவி அறிவியல் துறை வெளியிட்ட ஆய்வறிக்கை ஒன்றில், சென்னையில், குறிப்பாக மெரினா கடற்கரையில், அதிகமாக மணல் சேர்ந்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது. இப்படி ஒரு நிலையில் மெரினாவையொட்டிய கடலுக்குள் இவ்வளவு பெரிய கட்டுமானத்தை அமைப்பதற்கான ஆய்வுக்கு மத்திய அரசு எதன் அடிப்படையில் ஒப்புக் கொண்டது என்று தெரியவில்லை.

குமரியில் பாறை மீது வள்ளுவர் சிலை அமைக்கப்பட்டதால் சூழலியல் பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால் பேனா நினைவுச் சின்னம் அமைக்க கடலின் நடுவே பாறைகளை கொட்டி பெரிய பரப்பளவிலான மேடு உருவாக்கப்பட வேண்டும். இதனால் ஏற்படும் சூழலியல் பாதிப்பை மத்திய அரசு கவனத்தில் கொண்டதா? என்ற கேள்விக்கு விடை தெரியவில்லை. கடலிலும், கடற்கரையிலும் திட்டங்களைக் கொண்டு வரும்போது மீனவர்களுக்கு பாதிப்பு உள்ளதா, இல்லையா? என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். கடல் நடுவே பேனா நினைவுச் சின்னத்தை அமைத்தால், கடல் சார் தொழிலை நம்பியுள்ள மீனவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். இந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென மீனவர்கள் எழுப்பும் குரல் மத்திய, மாநில அரசுகளின் செவிகளுக்கு எட்டவே இல்லை.

**தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற பணம் இல்லையென கூறும் தமிழ்நாடு நிதியமைச்சர், இதற்கு எப்படி பணம் 81 கோடி ஒதுக்கப்போகிறார் என்பது மில்லியன் டாலர் கேள்வி.**

பல்வேறு குழுக்களின் வரிசையில் கால நிலை மாற்றத்துக்கான நிர்வாகக் குழு ஒன்றையும் தமிழக அரசு அமைத்துள்ளது. மாண்டேக் சிங் அலுவாலியா, நந்தன் நிலகேனி தொடங்கி, நம்மூர் பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சுந்தர்ராஜன் வரை பல நிபுணர்கள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். பூவுலகின் நண்பர்கள் அமைப்பு பேனா நினைவுச் சின்னத்துக்கு வெளிப்படையாக எதிர்ப்பு தெரிவிக்கிறது. காலநிலை மாற்றத்துக்கான குழுவிடம் பேனா நினைவுச் சின்னம் பற்றி தமிழக அரசு ஆலோசித்ததா? நிபுணர்கள் பரிந்துரைத்தது என்ன? என்பது பற்றி தமிழக அரசு பொதுத்தளத்தில் வெளியிட வேண்டும்.

மத்திய அரசு கூறியதன் அடிப்படையில், கருத்துக் கேட்புக் கூட்டம் என்ற ஒன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் சென்னையில் ஜனவரி 31 அன்று கலைவாணர் அரங்கத்தில் சம்பிரதாயமாக நடந்தேறியது. இது தொடர்பான காணொளியில் தமிழ், ஆங்கிலத்தோடு இந்தியிலும் வர்ணனை இடம்பெற்றிருந்தது. இந்தியை எதிர்ப்பதாக கூறிக்கொண்டு, இந்தியில் ஏன் வர்ணனை?

பேனா வடிவ நினைவுச் சின்னத்தால் ஏற்படும் சூழலியல் பாதிப்புகளை பட்டியலிட முற்பட்டவர்கள் முழுமையாக பேச அனுமதிக்கப்படவில்லை. இந்தக் கூட்டத்துக்குக் கூட ஆட்களை திரட்டி இறக்குமதி செய்திருந்தது ஆளும்கட்சி. அவர்கள் கூச்சலெழுப்பி, எதிர் கருத்தாளர்களை பேச விடாமல் தடுக்க முற்பட்டார்கள். பெரும்பாலானோருக்கு தாங்கள் எதற்கு கூட்டத்துக்கு அழைத்து வரப்பட்டோம் என்பதே தெரியவில்லை. இந்த கருத்துக் கேட்பு கூட்டத்துக்கு முன்னர், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு, சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம், அபாய மதிப்பீடு ஆய்வு, பேரிடர் மேலாண்மைத் திட்டம் மற்றும் அவசரகால செயல் திட்டம் ஆகியவை முறையாக தயாரித்து பொதுப்பார்வைக்கு வைக்கப்பட்டதா? என்பதும் தெரியவில்லை. கருத்து கேட்பு கூட்டத்தின் மூலம் பெறப்பட்ட கருத்துருக்கள் மத்திய நிபுணர் மதிப்பீட்டுக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்கள் தரும் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இறுதி அனுமதி வழங்கப்படுமாம்.

பேனா நினைவுச் சின்னத்தினால் ஒரு பகுதியில் ஏற்படும் கரையோரப் மணல்பெருக்கம், மற்றொரு பகுதியான வடசென்னையில் ஏற்படவிருக்கும் கடல் அரிப்பு ஆகியவற்றின் தாக்கம், கடலோர மக்கள் பாதுகாப்பு, கடல்வாழ் உயிரினங்களின் தாக்கம், கடல் ரோந்து, மீன்பிடி நடவடிக்கை விவரங்கள் மற்றும் நினைவுச் சின்னத்தால் மீன்பிடி நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய பாதிப்பு ஆகியவற்றை நிபுணர் மதிப்பீட்டுக் குழு கருத்தில் கொண்டு பரிந்துரை வழங்க வேண்டும். மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் இந்த விவகாரத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

அரசியல் காரணங்களுக்காக சுற்றுச்சூழல் பாதிப்பை மத்திய அரசு கவனத்தில் கொள்ளாவிட்டால், இயற்கை வலுவாக திருப்பி அடிக்கும். அதை யாராலும் தடுக்க முடியாது. சூழலுக்குப் புறம்பாக வலிந்து திணிக்கும் எதையும் கடல் தன்னகத்தே இருத்திக் கொள்வதில்லை, வெளியேற்றிவிடும். அது பேனா நினைவுச் சின்னமாக இருந்தாலும் சரி, பட்டேல் சிலையாக இருந்தாலும் சரி.

***-கி.கோபிநாத்,*** ஊடகவியலாளர்
அறம் ஆன்லைன் **(February 1, 2023)**

---

## <u>முடக்கப்பட்ட பி.பி.சி ஆவணப் படத்தின் முக்கிய உண்மைகள்!</u>

குஜராத் கலவரச்சதியில் இருந்து தப்பித்துக் கொண்ட நரேந்திர மோடியை மீண்டும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் பிபிசியின் இரு ஆவணப்படங்கள் அதிகார அழுத்தத்தால் நீக்கப்பட்டுவிட்டன! ஆயினும், அவற்றில் சொல்லப்பட்டவற்றின் சாராம்சத்தை பிரண்ட் லைனில் ஆசிஷ் ரே எழுதியுள்ளார்! இதோ அதன் தமிழாக்கம்!

> "மோடி உள்ளிட்ட இந்துத்துவவாதிகளுக்கு இந்த கலவரத்தில் உள்ள நேரடி தொடர்புகளை பிபிசி ஆவணப்படம் தோலுரித்து காட்டுவதால், பதறிய மத்திய பாஜக அரசு அவரசரகால சட்டங்களை வைத்து இதை முடக்கியுள்ளது. இது ஜனநாயக விரோதம் மட்டுமல்ல, சட்ட விரோதமும் கூட" என இந்தியாவின் அனைத்து எதிர்கட்சிகளும் கண்டித்துள்ளன!"

இந்த கலவரம் குறித்து, இங்கிலாந்தில் 2001 முதல் 2006-ஆம் ஆண்டு வரை இருந்த வெளியுறவுத் துறை முன்னாள் செயலர் ஜேக் ஸ்ட்ரா வெளிப்படுத்திய கருத்துக்கள், குஜராத் கலவர புகைப்படங்கள் மற்றும் அறிக்கைகள், கலவரத்துக்கு அப்போது குஜராத் முதல்வராக இருந்த நரேந்திர மோடிதான் காரணம் என்பதைச் சுட்டிக்காட்டி பேசுவோரின் வீடியோக்கள் மட்டுமின்றி மோடியின் பேட்டியையும் உள்ளடக்கிய இந்த ஆவணப்படத்தை இனி பார்க்க முடியாது. எனவே, அந்த ஆவணப்படத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற சாரம்சத்தை இங்கே நாம் பார்ப்போம்!

### மோடியை மீண்டும் கூண்டில் ஏற்றும் பிபிசியின் புதிய ஆவணப்படம்!

"இந்தியா: மோடி ஒரு கேள்விக்குறி எனும் பொருள் தரும் தலைப்பில், இரண்டு பகுதிகளைக் கொண்ட ஓர் ஆவணப்படத்தின் முதற்பகுதி, பிரிட்டனில் ஜனவரி 17 அன்றும் இரண்டாம் பகுதி ஜனவரி 23 அன்றும் ஒளிபரப்பாயிற்று. 2002 – ஆம் ஆண்டு குஜராத்தில் நடைபெற்ற கலவரத்தில் அன்றைய முதல்வர் மோடி குற்றமிழைத்துள்ளார் என

பிரித்தானிய அரசு கூறியுள்ளது கலவரம் முடிந்தவுடன், 2002 – ல் பிரித்தானிய வெளிநாட்டு அலுவலகம் ஒரு புலனாய்வு விசாரணையை மேற்கொண்டது.

அவ்விசாரணை அறிக்கைக்கு பின்வருமாறு தலைப்பிடப்பட்டது: “குஜராத் இனக்கலவரம்”. “வன்முறையின் நீட்சி, அறிவிக்கப்பட்டதைக் காட்டிலும் மிகவும் மோசமானதாக இருந்தது. குறைந்தது 2,000 பேர் கொல்லப்பட்டனர். பரவலாக, இசுலாமியப் பெண்கள் திட்டமிட்டுக் கற்பழிக்கப்பட்டனர். 1, 38, 000 பேர் உள்நாட்டு அகதிகளாயினர். இந்துக்கள் வாழும், இந்து – இசுலாமியர்கள் கலந்து வாழும் பகுதிகளில் இருந்த இசுலாமியர்களின் வியாபாரங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன”. மேலும் அது கூறுகிறது: “அரசியல் உள்நோக்கத்துடன் பல மாதங்கள் முன்பாகவே இவ்வன்முறை திட்டமிடப்பட்டது. இந்துக்கள் வாழும் இடங்களில் இருந்து, இசுலாமியர்களைத் துடைத்தெறிவதே இலக்கு. இந்து தீவிரவாத அமைப்பான வி ஹெய்ச் பியின் தலைமையில் நடைபெற்ற வன்முறையை, மாநில அரசு ஆதரித்தது. மோடி முதலமைச்சராக நீடிக்கும் வரை மறுசீரமைப்பு என்பது இயலாத ஒன்று”.

“இந்துக்களால் திட்டமிட்டு நடத்தப்பட்ட இவ்வன்முறையில், ஓர் இனத்தை அழித்தொழிக்கும் எல்லா அம்சங்களும் இருந்தன. மாநில அரசு, இக்கொடிய சூழலை உருவாக்கியிருக்காவிட்டால், வி ஹெய்ச் பி யால் இந்த அளவு பேரழிவை உண்டாக்கியிருக்க முடியாது”.

இறுதியாக இவ்வறிக்கை கூறுகிறது: **“இந்த அழிவிற்கு நரேந்திர மோடியே நேரடியாகப் பொறுப்பானவர்”**. இதற்கு இணையான ஓர் ஆய்வை, ஐரோப்பிய ஒன்றியமும் நடத்தியது. குஜராத் மாநில அரசின் அமைச்சர்கள் இவ்வன்முறையில் தீவிரமாகச் செயல்பட்டதாகவும், காவல்துறையின் மூத்த அதிகாரிகள் இவ் வன்முறையைத் தடுப்பதில் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் இவ்வாய்வு குறிப்பிடுகிறது. மேலும், 2002 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 – ஆம் நாள், காவல் துறையின் மூத்த அதிகாரிகளை மோடி சந்தித்ததாகவும், கலவரத்தைத் தடுக்க வேண்டாம் என்று அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாகவும், நம்பத்தக்க மனிதர்கள் இத்தகவல்களை தங்களிடம் கூறியதாகவும் இவ்வறிக்கை குறிப்பிடுகிறது. ஆனால், இக்கூட்டம் நடந்ததையே காவல்துறை மறுக்கிறது என்றும் இவ்வறிக்கை பதிவு செய்துள்ளது.

மோடியின் ஆதரவாளர்கள், இவற்றை மறுப்பதையும் இவ்வாவணப்படம் பதிவு செய்துள்ளது. குஜராத் மாநில உளவுத்துறையின் அப்போதைய தலைவராக இருந்த நேர்மைக்கு பேர் போன **ஆர் பி ஶ்ரீகுமாரும்**, மற்றுமொரு நேர்மையான காவல்துறை அதிகாரியாக இருந்த **சஞ்சீவ் பட்டும்** மோடி மேற்கூறியவாறு உத்தரவிட்டதாகக் கூறினர். ஆனால், முதலமைச்சரின் தரப்பினர் ஶ்ரீகுமாரோ அல்லது பட்டோ இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவே இல்லை என அதிரடியாக மறுத்தனர். கடந்த 2022 – ஆம் ஆண்டு இவர்கள் இருவரும் செய்திகளை திரித்துக் கூறினர் என்று அபாண்டமாக குற்றம் சாட்டப்பட்டனர். ஆனால், வேறு ஒரு வழக்கின் காரணமாக, பட்டுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, அவர் சிறையில் அடைக்கப்பட்டார். கலவரத்தின்போது, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இஷான் ஜாஃப்ரியின் வீடு இந்து மத வெறியர்களால் சூழப்பட்டதையும், அப்போது அவர் மோடியைத் தொலைபேசியில் அழைத்ததையும், மோடி அவரது அழைப்பை ஏற்கவில்லை என்பதையும், பிறகு ஜாஃப்ரி கொல்லப்பட்டதையும் இதில் நேரடியாகத் தொடர்புடைய நபர் கூறியுள்ளார்.

இக்காலகட்டத்தில், குஜராத் அரசில் அமைச்சராக இருந்த ஹாரன் பாண்டியா மோடி மேற் கூறியவாறு உத்தரவிட்டதாக இவ்வாவணப்படத்தில் பதிவு செய்திருந்தார். ஆனால், அவர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார் என்பது மறுக்கப்படுகிறது. பாஜகவின் மாநிலங்களவை உறுப்பினரான சுப்ரமண்ய ஸ்வாமி, ஹாரன் பாண்டியாவின் இறப்பு பற்றிக் கூறுகையில், **“அது கொடூரமானதும், மர்மமானதும்”** என்று குறிப்பிட்டுள்ளார்.

### குஜராத் கலவரம் பற்றிய இப்படத்தை பிபிசி இப்போது ஏன் வெளியிடுகிறது?

தற்சமயம் பிரிட்டன் அரசு இந்திய அரசுடன் ஒரு வணிக ஒப்பந்தத்தை கையெழுத்திட இருக்கிறது. பிரிட்டனில் உள்ள தொலைகாட்சி பார்க்கும் ஒவ்வொருவரும் செலுத்தும் அனுமதித் தொகையின் மூலம் “ராயல் சார்ட்டர்” எனும் அமைப்பின் கீழ் இயங்கிவரும் ஒரு பொது ஒளிபரப்பு நிறுவனமாக உள்ளது பிபிசி.

பிரிட்டனின் பிரதமராக இருந்த டோனி பிளேயரின் அமைச்சரவையில் வெளிநாட்டு செயலராக இருந்த **ஜாக் ஸ்ட்ரா** என்பவர் தான் இந்தப் புலனாய்வுக்கு உத்தரவிட்டார். அதற்கு முன்பாக உள்நாட்டுச் செயலராக இருந்த அவர், 2000 – ஆவது ஆண்டு சுதந்திரமான தகவல் சட்டத்தை நிறுவினார். 2015 – ஆம் ஆண்டு, அச்சட்டத்தை மறுஆய்வு செய்யும் அமைப்பின் ஓர் உறுப்பினராக அவர் செயல்பட்டார். பிரிட்டனின் தகவல் ஆணையத்துடன் ஸ்ட்ராவுக்கு இருந்த நெருக்கமே, இத்தகைய மறைமுகமான புலனாய்வு அறிக்கையை வெளிக் கொண்டு வருவதில் முக்கியப் பங்கு வகித்திருக்கக் கூடும். மற்ற ஊடகங்களுடன் ஒப்பிடுகையில், பிரிட்டன் நிர்வாகத்தில் அதிகச் செல்வாக்கு உடையதாக பிபிசி விளங்குகிறது. வேறு எந்த ஊடகம் கோரியிருந்தாலும், இந்தியாவில் மோடி உச்சபட்ச அதிகாரத்தில் இருக்கும் தற்சமயம், இரு நாடுகளுக்கு இடையே அரசாங்க உறவில் இது மோசமான அதிர்வலைகளை ஏற்படுத்தும் என்கிற காரணத்தால், இத் தகவல்கள் வெளிவராமல் தடுக்கப்பட்டிருக்கும்.



**குஜராத் கலவரத்தில் படுகாயமடைந்த குழந்தைகள்!**




**சொந்த மண்ணிலே அகதிகளாக்கப்பட்ட இஸ்லாமியர்கள்!**

இதைப்பற்றி ஸ்ட்ரா கூறுகையில், “இது அதிர்ச்சியளிக்கிறது. முதல்வராக இருந்த மோடி, காவல்துறை தனது கடமையை செய்ய விடாது தடுத்தார் என்பதும், இந்து தீவிரவாதிகளை கலவரம் செய்ய அவர் ஊக்குவித்தார் என்பதும், தீவிரமான குற்றச்சாட்டுகள். இந்து – இசுலாமிய மதங்களைச் சார்ந்த இருதரப்பு மக்களையும் பாதுகாக்க வேண்டிய காவல் துறையை, அரசியல் காரணங்களுக்காக, செயல் படவிடாமல் செய்தது என்பது அசாதாரணமான எடுத்துக்காட்டு. வெளிப்படையாக மோடியின் செல்வாக்கின் மீது விழுந்த களங்கங்கள் இவை” என்கிறார். இந்த ஆவணப் படத்தில் இடம் பெற்றுள்ள பதிவுகளும், நேர்காணல்களும் ஆவணக் காப்பகத்திலிருந்து எடுக்கப்பட்டவை என்றாலும், அவை மோடியை ஓர் இனவாதியாவே சித்தரிக்கின்றன. “இக்கலவரங்களின் மூலமாக குஜராத் இந்துக்களின் ஆதரவைப்பெறும் நோக்கில், 2002 – இல் தேர்தலை அறிவித்த மோடியின் மனநிலை மிகுந்த அச்சுறுத்தலைத் தருவதாக இருந்தது” என்று பிபிசியின் பெண் நெறியாளர் **அந்த பெண் நிருபர் மோடியுடன் நடத்திய உரையாடல்;**

**பி.பி.சி. நிருபர்;** “தங்களது உறவினர்களைக் கொன்ற மனிதர்கள் நீதியின் முன் நிறுத்தப்படாத நிலையில், தங்களது வீடுகளுக்குத் திரும்பச் செல்லப் பயப்படும், இன்னும் அதிர்ச்சியில் உறைந்து கிடக்கும், மக்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?”

**மோடி;** “உங்களுடைய ஆய்வை என்னால் ஏற்கமுடியாது. நீங்கள் தரும் தகவல்களையும் என்னால் ஏற்க முடியாது. இது தவறாக வழி நடத்தும் தகவல். இவற்றை எங்கிருந்து நீங்கள் எடுத்தீர்கள் என்று எனக்குத் தெரியாது”.

**பி.பி.சி நிருபர்**; “இவையெல்லாம் தனிநபர்கள் கொடுத்து, வெளியான ஆய்வறிக்கைகள்…” இடைமறித்து ஆவேசப்படுகிறார் மோடி.

**மோடி;** “எந்த அரசாங்கத்தின் உள்விவகாரத்திலும் தலையிட அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. நான் மனதளவில் மிக மிகத் தெளிவாக இருக்கிறேன். அவர்கள் செய்துள்ளது மிகவும் தவறானது”.

**பி.பி.சி. நிருபர்**; “வேறு ஏதாவது வித்தியாசமாக நீங்கள் செய்திருக்க வேண்டும் என நினைக்கிறீர்களா....?”

**மோடி** ; “ஆம், ஊடகங்களைக் கையாள்வதில் நான் மிகவும் பலவீனமாக இருந்திருக்கிறேன்....”

இந்த ஒட்டுமொத்த உரையாடலின் போதும், பேட்டி எடுத்த பெண்மணியை நோக்கி, தனது இடது ஆட்காட்டி விரலை மிகுந்த கோபத்துடன் ஆட்டிக் கொண்டே மோடி பேசினார். இந்து அடிப்படைவாதக் குழுக்களின் அழைப்பை ஏற்று, 2003 – இல் மோடி பிரிட்டனுக்கு வந்தார். ஆனால், அவரது வருகையை பிரிட்டன் அரசு எதிர்த்தது. அரசு அலுவலகம் தெரிவித்தது: “அவர் பிரிட்டனுக்கு வருவதை நாங்கள் அறிந்திருந்தோம். மேன்மைக் குரிய அரசியின் அழைப்பிலோ அல்லது அரசின் பேரிலோ அவர் இங்கு வரவில்லை. எனவே அவருடன் எந்தத் தொடர்பையும் நாங்கள் வைத்திருக்கவில்லை”.

2019 – ஆம் ஆண்டு, ஒரு விபத்தில் இறந்து போன சத்யப்ரதா பால், அப்போது இந்தியத் தூதரகத்தின் துணை அதிகாரியாக இருந்தார். “அப்போது வெளியுறவு அமைச்சராக இருந்த யஸ்வந்த் சின்ஹா, அப்போதைய பிரதமராக இருந்த வாஜ்பாயைச் சந்தித்து, மோடியின் வருகை விரும்பத்தகாத ஒன்று என்றும், அது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய ஒன்று” என்றும் அவர் எழுதியிருந்தார். ஆனால், சங்கப் பரிவார் கொடுத்த நெருக்கடியின் காரணமாக, அவரது வருகை நிகழ்ந்தது. மோடி பிரிட்டனில் இருந்த போது, இலண்டன் நீதிமன்றத்தில், அவரைக் கைது செய்ய ஒரு விண்ணப்பம் கொடுக்கப்பட்டது. ஆனால், அது மயிரிழையில் தவறிப் போனது. இதில் தொடர்புடைய இம்ரான் கான் என்னும் பிரித்தானிய வழக்கறிஞர் கூறினார்: “நாம் இப்போது எதை அறிகிறோமோ, எத்தகைய தகவல்கள் நம்மிடம் இருக்கின்றனவோ, அவை அப்போது நம்மிடம் இருந்திருந்தால், மோடி கைது செய்யப்படுவதற்கான அரசாணை, அப்போது பிறப்பிக்கப்பட்டிருக்கும்”.

2005 – ஆம் ஆண்டு வாக்கில், மோடி பிரிட்டனுக்கு வருவதை, பிரிட்டன் அரசு தடை செய்திருந்தது. அரசாங்க ரீதியாக, அது தனது எதிர்ப்பைக் காட்டியது. அதே சமயத்தில் தான், அமெரிக்க அரசும் அவருக்கு விசா வழங்க மறுத்திருந்தது. இந்தியாவிலுள்ள முப்பதுக்கும் மேற்பட்டவர்கள், தங்களுடைய பாதுகாப்புக் கருதியும், அச்சத்தாலும் இந்த ஆவணப்படத்தில் பங்கு பெறுவதற்கு மறுத்து விட்டனர். இப் படத்தில் உள்ள குற்றச்சாட்டுகள் பற்றி, கருத்து தெரிவிக்க இந்திய அரசு மறுத்து விட்டது.

**“வரலாறு திருப்பி எழுதப் படுகிறது”** என்கிற வரியுடன் இந்த ஆவணப்படம் நிறைவடைகிறது. இதன் இரண்டாவது பகுதி, ஜனவரி 24 அன்று ஒளிபரப்பப்பட உள்ளது. 2019 – ஆம் ஆண்டு, மோடி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டபின் நடந்தவை பற்றி இது பேசும்.

வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் **அரித்தம் பக்ஷி** இந்த பிபிசி ஆவணப்படம் பற்றிக் குறிப்பிடுகையில், “முக்கியத்துவம் இல்லாத ஒரு சொல்லாடலைப் பரப்பவே, இது வடிவமைக்கப் பட்டுள்ளது” எனக் கூறி, இதனைக் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

கட்டுரையாளர்; **ஆசிஷ் ரே – (**January 24, 2023) இலண்டன் பிபிசி மற்றும் சி என் என் ஆகிய நிறுவனங்களின் ஆசிரியர்.
நன்றி; **Frontline** ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்; **முனைவர் தயாநிதி.**

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

| | |
|---|---|
| திரு N சுப்ரமணியன், தலைவர் | : 9444274352 |
| திரு V கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் | : 87783 12823 |
| திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் | : 90031 25142 |

E- Mail : acmchennai2001@yahoo.co.in

Website: anticorruptionchennai.com

# செயற்குழுக் கூட்டம் (21-01-2023)

இன்று நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் உப தலைவரும், பொது செயலாளரும் மூன்று செயற்குழு உறுப்பினர்களும், கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் 2022ம்ஆண்டு டிசம்பர் மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. சென்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில் கூறியபடி நாமக்கல் மாவட்டம் தவிர மற்ற அனைத்து மாவட்டங்கள், மற்றும் கிளைகளின் வரவு செலவு கணக்குகள் கிடைக்கப்பெற்றன. வரவு செலவு கணக்குகள் முறையான பதிவேட்டில் எழுதப்படாததால், அவற்றை மறு பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. நமது நடைமுறைத் திட்டசெயலாளர் திரு பாலாஜி அவர்களை அக்கணக்குகளை சரிபார்த்து சீர்திருத்துமாறு செயற்குழு கேட்டுக்கொள்கிறது. நிதிச்செயலாளர் பொறுப்பும் அவருக்கு கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

3. <u>அமைச்சர் **செந்தில் பாலாஜி வழக்கு**:</u>

திரு செந்தில் பாலாஜி வழக்குகளில் ஆரம்ப முதல் காவல்துறை முறையாக செயல்படாமல் இருப்பதுவும், உச்ச நீதிமன்றம் உத்தரவு அளித்த பிறகும் இன்று வரை அவர் மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் பதியாமல் இருப்பதும் அவருக்கு சாதகமாக காவல்துறை அதிகாரிகள் செயல்பட்டதும் நீதிமன்ற அவமதிப்பு செயலாகாதா என உறுப்பினர்கள் விவாதித்து திரு செந்தில் பாலாஜி வழக்குகளில் குற்றத்தை மறைக்க அவருக்கு சாதகமாக செயல்பட்ட அனைவர் மீதும் நீதிமன்ற அவமதிப்பு உட்பட குற்றவழக்கு களைப்பதிய உரிய சட்ட நடவடிக்கை எடுத்து இனி இதுபோன்ற, ஆளுங்கட்சியினர் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்வதை தடுக்கவேண்டும் என்று தீர்மானிக்கபடுகிறது. இதன் மேல் விரைந்து செயல்படவும், உரிய வழக்குகளை உச்ச நீதிமன்றத்தில் தொடரவும் பொதுச் செயலாளரை செயற்குழுக் கேட்டுக்கொள்கிறது.

4 திரு மனுராஜ் மீதான நடவடிக்கை மற்றும் “தாமதமாகும் வாய்தா வழக்குகள்” பற்றி அடுத்த மாதக் கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

5. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| ஒப்பம் | ஒப்பம் |
| ந சுப்ரமணியன்<br>.தலைவர் | V கார்த்திகை ராஜன்<br>பொதுச் செயலாளர் |

<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.</u>

நன்கொடைகள்**.** வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் **வரி**விலக்கு**(**சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**

**Savings A/C No: 000901000041657**

## இப்படியெல்லாம் பேசிக்கிறாங்க

அதானி நிறுவனங்களுக்கு AA ரேட்டிங் கொடுத்த CRISIL ரேட்டிங் ஏஜென்சி சமீபத்திய நிகழ்வுகளைத் தொடர்ந்து, அந்நிறுவனங்களை தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தி வருவதாக தெரிவிக்கிறது.

- கடன் பற்றிய முழு விவரங்களை அனுப்பி வைக்குமாறு ரிசர்வ் வங்கி அணைத்து வங்கிகளுக்கும் எழுதியிருக்கிறது.
- மோசடி நடந்திருப்பதற்கான "வாய்ப்புகளை" விசாரிப்பதாக செபி கூறுகிறது.
- பழைய தமிழ் சினிமாவில் இறுதிக் காட்சியில் போலீஸ் வருமே , அதே தான் !
- முளையிலே கிள்ளியெறியும் அதிகாரம் கொண்டவர்களின் மெத்தனப்போக்கைப் பாருங்கள்: கொடுமை !
- **Hindenburg Research** இப்போது தான் அதானி குழுமத்தை பற்றி சொல்கிறது.
- ஆனால், **பிசினஸ்லைன் பிசினஸ் ஸ்டேண்டர்டு எக்கனாமிக் டைம்ஸ் பத்திரிக்கைகள். இரண்டாண்டுகளாக கட்டுரைகளை எழுதியிருக்கின்றன**. சில அதானி நிறுவனங்களுக்கு கடனுக்கு வட்டி கட்டும் அளவுக்குக் கூட வருமானம் இல்லையென்று சாமானியர்களுக்கும் தெரியும் வகையில் இரண்டாண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார்கள்

. "அதானி குழுமங்களின் நிகர வருமானம்/ கடன் விகிதங்களை அலசி ஆராய்ந்து ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது பிசினஸ் நாளிதழ் ஒன்று.

1. நிகர வருமானத்தை ஒப்பு நோக்குமிடத்து கடன் தொகை மிக அதிகம்.
2. பங்குச்சந்தையில் அதானி குழுமத்தின் பங்குகள் மிகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
3. சில தொழிற் பிரிவுகளில் வட்டியை விட வருமானம் குறைவு
4. உள்கட்டமைப்பு, மின் உற்பத்தி, பகிர்மானம் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்த பிற நிறுவனங்கள் நஷ்டத்தில் மூடப்பட்டுவிட்டன என்பது முந்தைய வரலாறு.
5. சென்ற ஆண்டு அம்பானியின் நிறுவனங்கள் கடனைக் குறைத்துக் கொண்டிருந்த நிலையில் அதானி கடனை அதிகரித்து இருக்கிறார்.
6. அதானி சொந்த பங்குகளை விற்று கடன் சுமையைக் குறைத்துக் கொள்ள முற்பட்டால் பங்கு விலைகள் குறைந்து நிலைமையை மேலும் சிக்கலாக்கும் அபாய ஒலி கேட்கிறது என்று சொல்லுகிறது கட்டுரை."
7. அரசதிகாரத்தின் உதவிக்கரம் இல்லாமல் நடந்திருக்க வாய்ப்பில்லை. விசாரணைகள் என்றுமே அரசு இயந்திரங்களின் கரங்களால் தடுக்கப்படும்; முடக்கப்படும் என்பதே அனுபவம் என்கிறது ஹிண்ட்டென்பெர்க் அறிக்கை

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**

**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**

**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

# அதானிக்கு சேவையே மோடியின் பிறவிப் பயனாம்!

***-ச.அருணாசலம்***

**January 28, 2023**

ஒரு தனி நபரின் பகாசுர மோசடிகளுக்கு துணை போன ஒரு பிரதமரையும், ஆட்சி நிர்வாகத்தையும் இந்தியா இது வரை கண்டதில்லை! ஒரு சாதாரண அதானியை, உலக பணக்காரனாக்க பாஜக அரசானது சட்டம், விதிமுறைகள் அனைத்தையும் வளைத்து, நீதித் துறையையும் கறைபடுத்தியது அம்பலப்பட்டு உள்ளது!







இந்தியாவின் நம்பர் ஒன் கார்ப்பரேட் குழுமம் அதானியின் ஷேர்கள் அதிரடியாக சரிவை சந்தித்ததில் 4,25,000 கோடிகள் இழப்பை சந்தித்துள்ளது. மோடிக்கு மிக நெருக்கமானவரான குஜராத்தின் கௌதம் அதானியின் கம்பெனி ஷேர்கள் சரிந்ததற்கு அமெரிக்காவை சார்ந்த ஹின்டன்பர்க் ரிசர்ச் என்ற நிறுவனத்தின் ஆய்வறிக்கைகளே காரணமாகும்! கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக புலனாய்வு செய்து ஆதாரங்களை திரட்டி, அதானியின் தில்லாலங்கடி வேலைகளை ஆதாரங்களுடன் பட்டியலிட்டுள்ளது, ஹிட்டன்பர்க் சர்ச்!

அதானி குரூப், ஷேர் மோசடி,அக்கௌண்டிங்க் மோசடி, பண மோசடி. அரசு மற்றும் பொது சொத்தைக் கொள்ளையடித்தல், மணி லாண்டரிங்க் ஆகிய வேலைகளில் பல பத்தாண்டுகளாக தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என ஆய்வறிக்கையைத் தனது வலைதளத்தில் ஜனவரி 24ம் தேதி வெளியிட்டது. மேலும் அதானி குரூப் கம்பனிகள் பெருமளவு கடனில் மூழ்கியுள்ளதாகவும் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து அதானி கம்பெனி ஷேர்கள் சரிவைத் சந்தித்துள்ளன

வலுவான ஆதாரங்களையும் தகவல்களையும் உள்ளடக்கிய இவ்வாய்வறிக்கை அதானி நிறுவனங்களின் மோசடிகளை ஆவணங்களுடன தோலுரித்து காட்டியுள்ளது. பல பக்கங்களை கொண்ட அந்த ஆய்வறிக்கை யின் சாராம்சத்தை சுருக்கமாக முன்வைக்க இக்கட்டுரை முயல்கிறது.

உலகின் மூன்றாவது பணக்கார நபரான கௌதம் அதானியின் சொத்து மதிப்பு 120 பில்லியன் டாலர்கள் என கூறப்படுகிறது. இதில் 100 பில்லியன் மதிப்பு கடந்த 3 ஆண்டுகளில் கூடியுள்ளது. அதாவது 2018ல் வெறும் 20 பில்லியனாக இருந்த சொத்து, இன்று 2022ல் 120 பில்லியன் டாலர் அளவு உயர்ந்துள்ளது. (1பி.=100கோடி ஒரு டாலர்=80ரூ). 17.8 டிரில்லியன் ரூபாய் (1டிரில்லியன்=1 லட்சம்) மதிப்புள்ள அதானி குரூப் பல பத்தாண்டுகளாக ஷேர் மோசடிகளில் ( ஷேரின் விலையை கம்பெனிகளே செயற்கையாக – போலியாக – விலையேற்றி கொள்வது) ஈடுபட்டும் அக்கௌண்டிங் மோசடிகளில் (பொய் கணக்கு) ஈடுபட்டும் வந்துள்ளது.

இந்த ஆய்வறிக்கை பல முக்கியமான நபர்களுடனும், முன்னாள் அதானி குரூப்பின் 12 மூத்த அதிகாரிகளுடன் உரையாடியும், ஆயிரக்கணக்கான ஆவண ஆதாரங்களை பரிசீலித்தும் நூற்றுக்கணக்கான கள ஆய்வுகளின் மூலமாகவும் உண்மை நிலவரங்களை கண்டு வெளியிடப்பட்டுள்ளது. இதை படிப்பவர்கள் இந்த ஆய்வை முழுமையாக நம்பாவிட்டாலும் கூட, அதானி குரூப்பின் முக்கியமான 7 கம்பெனி ஷேர்கள் அதன் அடிப்படை

மதிப்பிலிருந்து பல மடங்கு போலியாக உயர்த்தி மதிப்பிட பட்டுள்ளதால் அதன் சரிவு 85% சதவிகிதம் வரை இருக்கும் என்பதை மறுக்க முடியாது என்று ஹின்டன்பர்க் அறிக்கை கூறுகிறது.

பங்கு சந்தைகளில் பட்டியலிடப்பட்ட 22 அதானி கம்பெனிகளில் முக்கியமான நிறுவனங்கள் தங்களது பங்குகளை அடமானம் வைத்தும் பல வகையிலும் ஏராளமான கடன்களை வாங்கியுள்ளன. கடனைத் திருப்பி செலுத்தும் மதிப்பான **current ratio** இக் கம்பெனிகளிடம் 1க்கும் குறைவாகவே உள்ளது. நெருக்கடி ஏற்பட்டால் மொத்த குழுமமே நெருக்கடியில் நொறுங்கும் அபாயம் உள்ளதாக இவ்வறிக்கை எச்சரிக்கிறது.

**சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படாத சண்டி நிறுவனம்!**

மேலும், அதானி குழுமம் எந்த ஒரு நிறுவனத்திற்குமான சட்ட திட்ட இலக்கணங்களை கடைபிடிக்காமல், ஒரு குடும்ப தொழிலாகவே நடைமுறையில் உள்ளது என்பதை ஆதாரங்களுடன் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது இவ்வாய்வறிக்கை.

இந்த குழுமத்தின் அனைத்து உயர் பதவிகளுமே அதானி குடும்ப உறுப்பினர்கள் வசம் தான் உள்ளதாக குறிப்பிடுகிறது. இந்த பகாசுர கம்பெனி பல தொழில்களில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக அடிப்படை கட்டுமான திட்டங்களான துறைமுகங்கள், விமான நிலையங்கள், சுரங்கங்கள், தகவல் மையங்கள், எரிசக்தி தயாரிப்பு எரிசகதி பகிர்வு போன்ற துறைகளில் கொடிகட்டி பறக்கிறது. இதற்கு ஊக்கம் தரும் வகையில் இந்திய அரசு (ஆள்கின்ற மோடி கும்பல்) பொது சொத்துகளை இவர்களுக்கு அடிமாட்டு விலையில் தாரை வார்த்து கொடுக்கிறது.

இவர்களுடைய 9 முக்கியமான நிறுவனங்களின் மொத்த சந்தை மதிப்பு ரூ. 17.8 லட்சம் கோடி எனப் பார்த்தோம் . இவற்றின் மூலம் அதானி குடும்பம் கடந்த 3 வருடங்களில் 100 பில்லியன் சம்பாதித்துள்ளது. இந்த நிறுவனங்களின் பங்குகளின் விலை தாறுமாறாக எகிறியதால் தான் இது சாத்தியமாயிற்று. அதானி குழும உறப்பினர் பரம்பரை தொழிலதிபர்களா? அல்லது பரோபகாரிகளா ? பொது சொத்தை ஆள்வதற்கு!

அதானி குடும்ப உறுப்பினர்களும், நிறுவனங்களும் பல சந்தர்ப்பங்களில் மணி லாண்டரிங், பொது சொத்தை கொள்ளையடித்தல், மோசடி ஊழல் போன்ற குற்றங்களுக்காக விசாரிக்கப்பட்டனர். வெளிநாடுகளில் மொரீஷியஸ், யு ஏ இ, சிங்கப்பூர் மற்றும் கரீபியன் தீவுகளில் போலி நிறுவனங்களை (shell companies) ஏற்படுத்தி பண மோசடி மற்றும் வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக வழக்குகள் உள்ளன**.**

**மோசடிகளுக்கு கிடைத்த பரிசுகள்!**

கௌதம் அதானியின் இளைய சகோதரான ராஜேஷ் அதானி வைரங்கள் ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் இருந்தார் . 2004-2005ல் போர்ஜரி மற்றும் வரி ஏய்ப்பு மற்றும் மோசடி குற்றங்களுக்காக இரண்டு முறை கைதானார். போலி நிறுவனங்கள் மூலம் போலி இன்வாய்சுகள் தயாரித்து நடக்காத ஏற்றுமதி நடந்ததாக மோசடி செய்ததால் கைது செய்யப்பட்டார். அதற்குரிய தண்டனை கொடுக்காமல் வழக்கை நிலுவையிலேயே வைத்து அவரை பாதுகாக்கிறது மோடி அரசு! ஆனால், இந்த மோசடிக்கு பரிசாக அதானி குரூப்பின் மேனேஜிங் டைரக்டர் M.D. பதவி தேடி வந்தது.

ராஜேஷ் அதானியின் வைர வணிக மோசடி திட்டத்தில் (**Diamond Trading Scam)** கூட்டாளியாகவும், மோசடி கும்பலின் தலைவராகவும் செயல்பட்ட சமீர் வோரா ராஜேஷ் அதானியின் மைத்துனர் ஆவார். இவரையும் DRI Directorate of Revenue intelligence கைது செய்தது. இவருக்கும் அதானி குடும்பம் எக்சிக்யூட்டிவ் டைரக்டர் (ஆஸ்திரேலியா) ஆக பதவி "உயர்வு"கொடுத்து கௌரவித்தாக இவ்வறிக்கை கூறுகிறது.

**வெறும் லெட்டர் பேட் போலி நிறுவனங்கள்**

அதானியின் மூத்த சகோதரர் வினோத் அதானி வெளிநாடுகளில் போலி கம்பெனிகளை (shell companies) ஏற்படுத்தி, அவற்றின் மூலம் பண மோசடி, பங்கு மோசடி

ஆகியவற்றின் முக்கிய செயல் தலைவராக இருக்கிறார். 38 போலி கம்பெனிகள் மொரிஷீயஸ் நாட்டிலும், அதே எண்ணிக்கையில் சைப்ரஸ், சிங்கப்பூர் மற்றும் கரீபியன் தீவுகளிலும் நிறுவி மோசடிகளுக்கு அடித்தளம் அமைத்தார்.,இந்த நிறுவனங்களுக்கு முறையான முகவரியோ, தொலைபேசி எண்களோ, எந்தவித நடவடிக்கைகளோ இல்லை. ஆனாலும், இந்த போலி நிறுவனங்கள் பல்லாயிரம் கோடி டாலர்களை இந்திய நாட்டில். உள்ள அதானி நிறுவனங்களுக்கு வழங்கியது. 9அதற்கு வரி வில்லக்கும் தரப்ப்பட்டது) ஆனால், இதற்கான முறையான தகவலோ, ஆவணமோ இந்நிறுவனங்களிடம் இல்லை, இவர்கள் எப்படி ஏன் பணம் கொடுக்கிறோம் என்ற தகவலை இந்திய ஒழுங்கு நிறுவனங்களிடம் தெரிவிக்கவும் இல்லை.

இப்படி 13க்கும் மேற்பட்ட நிறுவனங்களை ஒரே நாளில் நிறுவி, அவைகளுக்கு ஒரே நாளில் வலை தளம் ஏற்படுத்தி கொடுத்த பெருமை வினோத் அதானியை சாரும் என தோலுரித்துக் காட்டும் இவ்வறிக்கை, இந்நிறுவனங்கள் குறிப்பாக இரண்டு பணிகளை செய்ததாக கூறுகிறது. ஸ்டாக் பார்க்கிங் அல்லது ஸ்டாக் மேனிப்புலேசன் என்றழைக்கப்படும் ஷேர் மோசடிகளில் இவை ஈடுபட்டன. இரண்டு, முறையாக அறிவிக்காமல் கள்ளப்பணத்தை அதானியின் இந்திய நிறுவனங்களுக்குள் நுழைத்த ‘மணி லாண்டரிங்’ வேலையிலும் இவை ஈடுபட்டன.

இக்குற்றங்கள் பற்றியெல்லாம் SEBI பங்கு பத்திர விற்பனை ஒழுங்கு மையம் ‘இன்னும்’ விசாரணை நடத்தி கொண்டிருப்பதாக பாவனை செய்து கொண்டுள்ளது! குறிப்பிடும் இவ்வறிக்கை ஊழல் நிறைந்த செபியின் அதிகாரிகளின் உதவியுடன் தான் இம்மோசடிகள் நடைபெற்று வருகின்றன என குற்றம் சாட்டுகிறது.

**மோசடி வழக்குகளை நிர்மூலமாக்கும் மோடி அரசு!**

பண மோசடி, ஊழல், திருட்டு , பொது மக்களின் (Tax payers fund) பணத்தை திருடுதல் மணி லாண்டரிங் போன்ற மோசமான கிரிமினல் குற்றச்சாட்டுகள் பல அதானி குழுமத்தின் மீது எழுப்பப்பட்டாலும் விசாரணையை மெதுவாக நடத்துவது அல்லது விசாரணைய முடக்கி வைப்பது இந்திய அரசின் கைங்கர்யமாக இருக்கிறது. அதானி குழும ஏற்றுமதி- இறக்குமதி மோசடி, அவை வைர வணிகமானாலும் சரி, இரும்பு தாது, நிலக்கரி மற்றும் எரி சக்தி உபகரணங்களானாலும் சரி அவற்றின் மொத்த மதிப்பு 17.8 பில்லியன் டாலர்களாகும் . இந்திய ரூபாய் மதிப்பில் கூறினால் 1லட்சத்து 36 ஆயிரம் கோடியாகும்.

அதானி இந்தியாவில் கொள்ளையடித்த பணங்களை வெளிநாட்டிற்கு கடத்தி பின் அங்கிருந்து போலி நிறுவனங்கள் மூலமாக இந்தியாவிற்குள் புகுத்துவதற்கு பல உதாரணங்களை குறிப்பிடும் அறிக்கையில் ஒரு சில உதாரணங்களை பார்ப்போம்.

மண்டரோசா இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ், 360 பில்லியன். இந்தியாவிற்கு அனுப்பியது. இந்த மண்டரோசா நிறுவனத்தின் ஐந்து இன்வெஸ்ட்மென்ட் நிதி நிறுவனங்களின் மூலம் அதானி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டது. யார் இதன் உண்மையான உடைமையாளர் என்று ஆராய்ந்தால் அதன் விடை அதானி குரூப் தான் . அதாவது தாங்களே சில போலி நிறுவனங்களை வெளி நாடுகளில் ஏற்படுத்தி அதன் மூலம் பணத்தை இந்தியாவுக்குள் கொண்டு வருகிறார்கள்! இதில் வரிவிலக்கும் பெற்றுவிடுகிறார்கள்! ஆனால், இந்திய அரசு மற்றும் செபி மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் ஆகியவை கண்டும் காணாமல் இருந்து விடுகின்றன!

இத்தகைய பணத்தின் மூலந்தான் இவரால் இந்திய அரசு தாரை வார்க்கும் அனைத்து துறைமுகங்கள், விமான நிலையங்களை மிக குறைந்த விலையில் ஏலத்தில் எடுக்க முடிகிறது. இதைப் போன்றே எலரா கேப்பிடல் மூலம் (83 பி. டாலர்) 66,000 கோடி ரூபாய் இந்தியாவிற்குள் அதானி கொண்டுவந்தார் என்று பல்வேறு ஆதாரங்களுடன் இவ்வறிக்கை பிட்டு பிட்டு வைக்கிறது. நியூ லெய்னா இன்வெஸ்ட்மெண்ட்ஸ் 423 மி. டாலர் அதானி எனர்ஜி கம்பெனிக்கு கொண்டு வரப்பட்டதும் இப்படித்தான் .

இதைப் போன்ற நிறுவனங்கள் மூலம் வெளியிலிருந்து கணக்கு எதுவும் காட்டாமல், அதானியால் நிதியை இந்தியாவிற்குள் கொண்டு வர முடிகிறது என்றால், இந்தியாவிலிருந்து சுருட்டி வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட பணத்தையே அதானி குழுமம் ந்த

வழிமுறைகள் மூலம் வெள்ளை பணமாக்குகிறது என்று நாம் அனுமானிக்கலாம்! வைர கடத்தலில் ஓவர் இன்வாய்சிங் முறையை கடைபிடித்து பணம் சுருட்டிய இக்கும்பல் கர்நாடகா மற்றும் கோவாவில் இருந்து இரும்பு தாதுவை (Iron Ore) அரசிற்கு கணக்கு காட்டாமல் வரி ஏதும் செலுத்தாமல் பாலகேரி துறைமுகத்தில் இருந்து ரூ. 60000 கோடி பெறுமான கனிமத்தை ஏற்றுமதி செய்தது அதானி குழுமம்.

உச்ச நீதி மன்றமே தலயிட்டு விசாரணைக்கு உத்தரவிட்டது, ஊரறிந்த ரகசியம். சின்ன மீனான ‘ரெட்டி சகோதர்ர்கள் ’ சில ஆண்டு காலம் சிறையிலிருந்தனர் ஆனால், அதானி மீது யாராலும் கை வைக்க முடியவில்லை. நிலக்கரி இறக்குமதியில் தமிழ்நாடு உட்பட அனைத்து மாநில அரசுகளுக்கு இறக்குமதி அனுமதி தராமல் அதானிக்கு நிலக்கரி இறக்குமதி செய்ய வழி வகை செய்கிறது பாஜக அரசு!

அடிமாட்டு விலைக்கு இந்தோனேஷியாவில் வாங்கப்பட்ட நிலக்கரியை ஒப்பந்தத்தை மீறி அதிகவிலைக்கு மாநில அரசுகளுக்கு விற்று கொள்ளையடித்து வருகிறது அதானி குழுமம் என்பதும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகையில் அதானி அடித்த லாபம் 29,000 கோடி ரூபாய்கள். இதைப்போன்றே எரிசக்தி உபகரணங்கள் இறக்குமதியிலும் ஓவர் இன்வாயசிங் முறையில் இந்திய மக்கள் பணத்தை கொள்ளையடித்ததையும் இவ்வறிக்கை பட்டியலிடுகிறது. இத்தனை அட்டூழியங்களையும் செய்ய அதானிக்கு யார் பக்க பலமாக, உறு துணையாக உள்ளனர்.

இக் கேள்விக்கு விடைகாணுமுன் இவரை எதிர்த்து, இவர்களின் மோசடிகளை திருட்டை எதிர்த்து குரல் கொடுப்பவர்கள் – முன்னாள் ஊழியர்கள், பொதுநல விரும்பிகள் , பத்திரிக்கையாளர்கள் ஆகியோர் அதானி நிறுவனங்களால் மிரட்டப்படுகின்றனர். சிலர் கொல்லவும் பட்டனர், சிலர் அரசின் உதவியால் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டுள்ளனர். நிதின் மாஞ்சோல் என்ற பத்திரிக்கையாளர் கைது செய்யபட்டார் .

சமூக வலைதளங்களில் அதானிக் கெதிராக வரும் செய்திகளை முடக்க நீதி மன்றங்களை நாடியதையும் அறிக்கை காட்டுகிறது. அதானி குரூப் செய்த வரி ஏய்ப்பை, சட்டங்களை மதியாமல் நடக்கும் போக்கை பொது வெளிக்கு கொண்டு வந்த எக்கனாமிக் அன் பொலிட்டிக்கல் வீக்லி Economic and Political Weekly இதழின் ஆசிரியரான பரஞ்ஜோய் குகா தாக்குர்த்தா மீது மான நஷ்ட வழக்கு தொடுத்து அவரை முடக்க முனைந்தார். அரசின் ஒத்துழைப்போடு தாக்குர்த்தாவை கைது செய்ய அதானி முனைந்தார்.

இந்தியாவில் மட்டுமல்லாது ஆஸ்திரேலியாவில் இவரது அட்டூழியங்களை அம்பலப்படுத்திய பத்திரிக்கையாளரை மிரட்டுவதும் , தனியார் துப்பறியும் நிறுவனங்கள் மூலம் தாக்க முற்படுவதும் உலகின் கவனத்திற்கு வந்தன. ஆஸ்திரேலியாவில் அபாட் சுரங்கம் துறைமுக திட்டத்தை நடத்துவதோடு பெரும் சர்ச்சைக்குள்ளான கார்மைக்கல் சுரங்க மற்றும் தெர்மல் பவர் பிளாண்ட்டையும் ஏலத்தில் எடுத்து ‘அதானி ஆஸ்திரேலியா ’ நிறுவனம் நடத்துகிறது. இதற்கெதிராக STOP ADANI என்ற பெரும் இயக்கமே ஆஸ்திரேலியாவில் நடந்து வருகிறது

இந்த கொள்ளை கும்பலுக்கு பணத்திறகு ஆசைபட்டு இந்திய அதிகாரிகளும் ஊழல் அரசியல் வாதிகளும் உதவி வந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளாக நீதிபதிகளும், அமைச்சர்களும் கூட உதவி செய்து அதானியை காப்பாற்றுகின்றனர்.

**நீதித்துறையிலும் அதானியின் அதிகாரம்!**

குஜராத்திலும்,மகாராஷ்டிராவிலும் அதானி எனர்ஜி நிறுவனம் ஒப்பந்தத்தை மீறி, மிக அதிக விலை கேட்டு, மின் வினியோகத்தை நிறுத்தியது! இதை எதிர்த்து அந்த மாநிலங்களின் மின்வாரிய அமைப்புகள் வழக்கு தொடுத்தன. வழக்கு உச்சநீதி மன்றம் வரை சென்ற பொழுது அருண் குமார் மிஸ்ரா தலைமையிலான அமர்வு அரசுக் கெதிராக, அதானிக்கு ஆதரவாக தீர்ப்பெழுதியது. இதைவிட ஆச்சரியம் அதானி வழக்குகள் அனைத்தையும் இந்த நீதிபதியே விசாரிக்கும்படி காய்கள் நகர்த்தப்பட்டன. இதன் விளைவு, அதானிக்கு பெருத்த லாபம்: இந்திய மக்களுக்கும் இந்திய மாநில அரசுகளுக்கும் பெருத்த நட்டம் பரிசாக கொடுக்கப்பட்டது. இதன் பின்னணியில் மத்திய பாஜக அரசு இருப்பது தான் கொடுமையாகும்! அதானியின் வழக்குகளையெல்லாம் நீதிபதி அருண் குமார் மிஸ்ரா

தலைமையிலான உச்சநீதி மன்ற அமர்வு விசாரிப்பதும் அவற்றில் எல்லாம் அதானிக்கு சாதகமாக – மாநில அரசுகளுக்கு எதிராக- தீர்ப்பு வழங்கியதும் கவனத்திற்கு உரியது.

# **ஜனவரி 29/2019 ல் அதானி காஸ் vs ராஜஸ்தான் மாநிலம் வழக்கு,**
# **மே02/2019ல் அதானி ~ டாடா பவர் வழக்கு**
# **மே07/2019ல் அதானி ~ சட்டீஸ்கர் மாநிலம் வழக்கு**
# **மே23/2019ல் அதானி ~ ராஜஸ்தான் மின் வாரியம் வழக்கு**
# **ஜூலை 02/2019ல் அதானி ~ குஜராத் மாநிலம் வழக்கு**
# **ஜூலை22/2020ல் அதானி ~ பவர் கிறீட் கார்ப் .(ஒன்றிய அரசு) வழக்கு**
# **செப். 20/2020 ல் அதானி ~ ராஜஸ்தான் மாநிலம் வழக்கு**

மேற்கூறிய வழக்குகளில் எல்லாம் உச்ச நீதிமன்ற நடைமுறை விதிகளுக்கு புறம்பாக நீதிபதி அருண் மிஸ்ரா அமர்வே அவசர அவசரமாக விசாரித்து அதானிக்கு ஆதரவாக தீர்ப்புகள் வழங்கியது சர்ச்சைக்குரியது ஆகும். இந்த நீதிபதி அருண்மிஸ்ரா தான் பிரதமர் மோடியை, வல்லவர், அறிவாளி என புகழ்ந்து பேசி , பதவி ஓய்வு பெற்றபின் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் பதவியை பெற்றவர்.

**அதானிக்கு வேலை செய்வதையே பிறவிப் பயனாம்!**

இப்படிப்பட்ட அக்மார்க் மோசடி பேர் வழியான அதானியைத் தான் இந்திய பிரதமர் மோடி, எப்போதும் வானளாவ புகழ்ந்து பேசுவார். அதானிக்காக பல நாட்டு தலைவர்களுடன் பேசி , அங்கெல்லாம் சுரங்கங்களை ஏலத்தில் பெற வகை செய்தார் . மோடியின் விமானப் பயணங்கள் அனைத்தும் அதானி குழுமத்து வளர்ச்சிகானதாகவே உள்ளது.

ஆஸ்திரேலியாவில் கார் மைக்கல் சுரங்கம் மற்றும் தெர்மல் பிளாண்ட் திட்டத்தை அதானிக்காக ஆஸ்திரேலிய பிரதமரிடம் பேசியுள்ளார் மோடி, ஸ்ரீலங்காவில் அதிபர் கொத்தபயா ராஜபக்சே விற்கு அழுத்தம் கொடுத்து பலவற்றை பெற காரணமானார்!.

2012 ல் மோடி குஜராத் முதல்வராக முதல்வராக இருந்தபோது அதானி நிறுவனத்திற்கு விதியை மீறி எரிசக்தி இலவசமாக வழங்கப்பட்டதை மத்திய தலைமை கட்டுப்பாட்டாளர் மற்றும் தணிக்கையாளர் சி ஏ ஜி கண்டித்துள்ளார் .குஜராத்தில் மோடி முதல்வராக இருந்த காலத்திலேயே 44 திட்டங்களை (Projects) அதானிக்கு வழங்கியதன் மூலம் அப்போதே சி.ஏஜியால் கண்டணம் செய்யப்பட்டவர் தான் மோடி! இந்திய மக்களின் பொது சொத்துக்களான துறைமுகங்கள் விமான நிலையங்கள், உணவு கிடங்குகள் கனிம வளங்கள் ஆகியவற்றை அதானிக்கு தாரை வார்க்கிறார் பிரதமர் மோடி.

அடுத்தடுத்து, மானிட்டைசேஷன் என்ற பெயரில் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும், கட்டுமான திட்டங்களையும் ஏன் போக்குவரத்து பாதைகளையும் அதானிக்கு கூட வழங்கி பெருமைபடுகிறார் மோடி. எரிசக்தி உற்பத்தியிலும், அதன் பகிர்விலும் அதானி ஏகபோக முதலாளியாக வலம் வருவது பாஜக அரசின் ஆதரவால்தான்.

கடந்த எட்டு வருட மோடி ராஜியத்தில் குஜராத்தியான அதானி குழுமம் துறைமுகங்கள், நிலக்கரி சுரங்கம் மற்றும் இறக்குமதி, பவர் ஜெனரேஷன், காஸ் விநியோகம், விமான தளங்கள், ஏரோஸ்பேஸ் டேட்டா சென்டர் தண்ணீர் மற்றும் எண்ணைய் விநியோகம் எனப் பல தளங்களில் துறைகளில் விரிந்து பரந்து உள்ளது.

இவ்வளவையும் அம்பலப்படுத்தி. அதானி குரூப்பிற்கு 88 கேள்விகளையும் கேட்டுள்ளது. ஹிட்டன்பர்க் ரிசர்ச்! இந்த வகையில் இங்கு வேலிக்கு ஓணான் சாட்சியாக இருப்பதை அனைவருக்கும் புரிய வைத்துள்ளது.

கட்டுரையாளர்;**ச.அருணாசலம்**
**அறம் ஆன்லைன்**

நுகர்வோர், அதன் சட்டங்களை பாதுகாக்க

# வழக்குரைஞர்கள் தூண்களாக இருக்க வேண்டும்

## நுகர்வோர் ஆணைய நீதிபதி பேச்சு

அரியலூர், ஜன.6: அரியலூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணைய நீதிபதி ராமராஜ் நுகர்வோர்களையும், அதன் சட்டங்களையும் பாதுகாக்க வழக்குரைஞர்கள் தூண்களாக இருக்க வேண்டும் என நுகர்வோர் ஆணைய நீதிபதி ராம்ராஜ் வழக்கறிஞர் மாநாட்டில் பேசினார்.

அரியலூரிலுள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்ற வழக்குரைஞர்களுக்கான நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் குறித்த மாநாட்டில் நுகர்வோர் ஆணைய நீதிபதி ராம்ராஜ் கலந்து கொண்டு பேசியதாவது:

மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை ஏதாவது ஒரு வகையில் நுகர்வோராக உள்ளதால் தேசத்தின் நுகர்வோர் நீதி நிர்வாகம் வலிமையாக இருக்கவேண்டும். இதனை வலுப்படுத்த நுகர்வோர்களும், வழக்குரைஞர்களும் முன் வர வேண்டும்.

நுகர்வோர்களையும், அதன் சட்டங்களையும் பாதுகாக்க வழக்குரைஞர்கள் தூண்களாக இருக்க வேண்டும். நுகர்வோர் நீதிமன்றங்களில், 60க்கும் மேற்பட்ட வகையான பிரச்னைகளுக்கு புகார் தாக்கல் செய்யவும், பலவகையான தீர்வுகளை பெறவும் புதிய நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் வழிவகை செய்துள்ளது. செயற்கையாக பொருள்களின் தட்டுப்பாட்டை உருவாக்குவது மற்றும் செயற்கையாக விலைவாசி உயர்வை ஏற்படுத்துவது போன்ற நுகர்வோர்கள் மீதான தாக்குதல்களை எதிர்த்தும் நுகர்வோர் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

நுகர்வோர்கள் ஒரு பொருளை அல்லது சேவையை வாங்க வேண்டுமெனில் மற்றொரு பொருளை விலைக்கு வாங்க வேண்டும் என்று நிர்பந்தம் செய்வதும், காலாவதியான பொருள்களை மறைத்து விற்பதும், சட்டத்துக்கு எதிரானதாகும் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

தங்கள் பொருளை வாங்கினால் சில பயன்கள் ஏற்படும் என்று ஆய்வக சோதனைகள் ஏதுமின்றி விற்பனை செய்வதும், ஆபத்து விளைவிக்கும் என்று கருதக்கூடிய பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதும், காலாவதியான பொருள்களை விற்பதும், ஒரு பொருளை விற்பனை செய்ய அரசிடம் அனுமதி பெற வேண்டும் என்ற நிலையில் அதனை பெறாமல் வர்த்தகம் செய்வது உள்ளிட்டவை தவறானவை. இணையதளம் மூலம் நடத்தப்படும் விளையாட்டு போட்டி போன்ற தன்மையிலான வணிகங்கள் உட்பட அனைத்து வகையான நுகர்வோரின் இணையதள பயன்பாடுகளில் பிரச்னை ஏற்படும்போது எங்கு அணுகுவது என்ற குழப்பமான நிலை பொதுமக்களுக்கு ஏற்படுகிறது.



அரியலூரில் நடைபெற்ற வழக்குரைஞர்களுக்கான நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் குறித்த மாநாட்டில் நுகர்வோர் குறைதீர் ஆணைய நீதிபதி ராம்ராஜ் பேசுகிறார்.

மாறிவரும் இணையதள யுகத்தில் ஏற்படும் இத்தகைய சவால்களை முறியடிக்கவும் புதிய நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் வழிவகுத்துள்ளது. பாதிக்கப்படும் நுகர்வோர் பொதுநல வழக்குகளை தாக்கல் செய்து நுகர்வோர் நீதியைப் பெற நுகர்வோர் நீதிமன்றங்களை அணுகலாம்.

பணம் செலுத்தி பெறக் கூடிய பொருள்கள் மற்றும் சேவைகள் குறித்த பிரச்னைகளுக்கு மட்டுமே நுகர்வோர் நீதிமன்றங்களை அணுக இயலும். கட்டணம் இல்லாமல் அரசு வழங்கும் பல்வேறு சேவைகளில் பிரச்னை ஏற்படும்போது மக்களுக்கு நீதி வழங்க தமிழக அரசு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் மாநில அளவிலான திருத்தங்களை மேற்கொண்டு நுகர்வோர் குறைதீர் ஆணையங்களை நுகர்வோர் குறை தீர் ஆணையம் மற்றும் சேவை உரிமை தீர்ப்பாயங்களாக மாற்றலாம். இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டால் நமது மாநிலம் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக இருக்கும் என்று பேசினார்.

சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பா மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார். மாநாட்டில், வழக்குரைஞர் சங்கச் தலைவர் மனோகரன், செந்துறை வழக்குரைஞர் சங்கத் தலைவர் சின்னதுரை, அரியலூர் வழக்குரைஞர் சுகுமார் உள்ளிட்ட வழக்குரைஞர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக அரசு வழக்குரைஞர் கதிரவன் வரவேற்றார். அரியலூர் மாவட்ட வழக்குரைஞர் சங்கச் செயலர் முத்துகுமார் நன்றி தெரிவித்தார்.

---

வக்கீல்கள் மூலம் நீதிபதிகளுக்கு லஞ்சம்:

# தீர்ப்பின் விலை ரூ.50 லட்சம்!

## கேரளாவை உலுக்கும் ஊழல்!!

திருவனந்தபுரம், ஜன.24– வழக்குறைஞர் மூலம் நீதிபதிகளுக்கு லஞ்சம் கொடுத்த சாதகமான தீர்ப்பை பெற்ற விவகாரம் கேரளாவை உலுக்கி வருகிறது. சாதகமான தீர்ப்பை பெற ரூ.50 லட்சம் வரை கொடுக்கப்பட்டுள்ளதாக செய்தி கசிந்துள்ளது, அதிர்வலைகளை உச்சப்படுத்தி உள்ளது.

நீதிபதிகளை கவனிக்க வேண்டிய வகையில் கவனித்தால் சாதகமான தீர்ப்பை பெற்றுவிடலாம் என்று அரசல் புரசலாக கூறப்படுவது உண்டு. இது வெறும் வதந்தி அல்ல. உண்மை தான் என்பதை உறுதிப்படுத்தும் நிகழ்வு கேரளாவில் நடைபெற்றுள்ளது.

கேரளாவைச் சேர்ந்த பிரபல வழக்குறைஞர் சைபை ஜோஸ் கிடங்கூர். அவர் நீதிபதிகள் மற்றும் வழக்காளிகளுக்கும் இடையே தரகராக செயல்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

வழக்கின் தன்மைக்கேற்ப ரூ.25 லட்சம் ரூ.50 லட்சம் என நீதிபதிகளுக்கு கையூட்டு அளித்து வழக்காளிகளுக்கு சாதகமான தீர்ப்பை சைபை ஜோஸ் கிடங்கூர் பெற்றுக்கொடுத்ததாக செய்தி கசிந்துள்ளது.

இந்த விவகாரத்தில் கேரள உயர்நீதிமன்ற நீதிபதிகள் பி.வி.குன்னி கிருஷ்ணன், ஏ.முகமது முஸ்டாக், ஏ.ஏ. ஜியாத் ரகுமான் ஆகியோரின் பெயர்களும் அடிபடுகின்றன. இந்த விவகாரம் கேரளாவை உலுக்கி வருகிறது.

இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது பனிப்பாறையின் நுனிப்பகுதி மட்டும் தான். முழு பனிப்பாறையும் வெளிச்சத்துக்கு வந்தால் அதிர்வலைகள் உச்சமடையும் என்று கூறப்படுகிறது. வழக்குறைஞர்கள் பலர் இது தொடர்பாக அளித்துள்ள தகவல்களை கேரள உயர்நீதிமன்ற லஞ்ச ஒழிப்பு பிரிவு பதிவு செய்துள்ளது.

இது தொடர்பாக துருவித்துருவி விசாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கேரள நிகழ்வு நீதித்துறை மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை சிதறடிக்கும் வகையில் உள்ளது.

தினந்தோறும் மாலை முரசு படியுங்கள்

---

**எட்டே வருடத்தில் இந்தியாவின் நம்பர் ஒன் பணக்காரர் ஆவது எப்படி**

ஸ்டெப் 1 - லெட்டர் பேடு கம்பெனி ஒன்றை ஆரம்பித்துக் கொள்ளவும்

ஸ்டெப் 2 - உண்மையான கம்பெனி போல பில்டப் செய்யவும். பழைய குடோன்கள், பதவிகளில் சொந்தக்காரர்கள், மார்க்கெட்டிங், இன்ன பிற

ஸ்டெப் 3 -அதை பங்கு மார்க்கெட்டில் வெளியிடவும். 100ல் 90 பங்குகளை நீங்களே வைத்துக் கொள்ளவும்

ஸ்டெப் 4 - ஆளுங்கட்சி உயர் புள்ளியை வைத்து எல்ஐசி மூலம் அந்த 10 பங்குகளை வாங்க போட்டி போட சொல்லவும். விலை எகிரும்

ஸ்டெப் 5 - எகிரிய பங்குகளை எஸ்பிஐயில் அடமானம் வைத்து ஒன்றுக்கு பத்தாக கடன் வாங்கவும்

ஸ்டெப் 6 - வரும் பணத்தில் ஆளுங்கட்சிக்கு எலக்ட்ரோல் பாண்டு மூலமாக கட்டிங் கொடுத்து விடவும். மிச்சத்தை வைத்து அடுத்த கம்பெனி ஆரம்பிக்க Step ஒன்னுக்கு செல்லவும்

**ஏழெட்டு முறை இப்படி செய்தால், இந்தியாவுக்கு என்ன, உலகத்திலேயே நம்பர் ஒன் பணக்காரராகலாம்.**

**தமிழக அரசுக்கு மொத்த கடன் கிட்டத்தட்ட 8 லட்சம் கோடியாம் இதில் அதிர்ச்சி அடைய என்ன இருக்கிறது ?**

அரசுக்கு வரும் மொத்த வருமானத்தில 60 % அதிகமாக அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம்

மதுக்கடைகளும் பெட்ரோல் பங்குகளும் மட்டுமே தமிழக அரசுக்கு அதிக வருமானம் கொடுக்கிறது வருமானத்தை அதிகரிப்பதற்கான அறிவுபூர்வமான திட்டங்கள் ஏதும் இல்லை

யார் ஆட்சிக்கு வந்தாலும் இலவசங்கள் தேவையற்ற மானியங்கள் கடன் தள்ளுபடி சலுகைகள் என இஷ்டத்துக்கு மக்கள் பணம் வீன் அடிக்கப்பட்டது

**எந்த ஒரு திட்டம் அமுல்படுத்த பட்டாலும் அதில் எவ்வளவு கொள்ளை அடிக்கலாம் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்படும் அரசியல்வாதிகள் இருக்கும் வரை தமிழ்நாட்டை எவராலும் காப்பாற்ற முடியாது**




சேலத்தில் பரபரப்பு சம்பவம்

## போலீஸ் சுற்றி வளைத்ததும் லஞ்ச பணத்தை வாயில் போட்டு மென்று விழுங்கிய வி.ஏ.ஓ.,

- மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று பறிமுதல்
- சஸ்பெண்ட் செய்யப்பட்டார்

சேலம், பிப்.5: சேலத்தில் வாரிசு சான்றிதழ் வழங்க லஞ்சமாக வாங்கிய ₹4,500 பணத்தை கிராம நிர்வாக அலுவலர் வாயில் போட்டுவிழுங்கியதகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் அழகாபுரம் பகுதியை சேர்ந்தவர் மாதேஷ்வரி. இவரது தந்தை கைலாசநாயுடு இறந்து போனார். இதனால், வாரிசு சான்றிதழ் பெறுவதற்கு வாழப்பாடியில் வசித்து வரும் தங்கை மகன் தினேஷ்குமார் உதவியை நாடினார். எம்பிஏ பட்டதாரியான அவர், இ-சேவை மையத்தின் மூலம் சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்தார். பின்னர், அழகாபுரம் கிராம நிர்வாக அலுவலர் குமரேசனிடம் இ-சேவை மையத்தில் விண்ணப்பித்தது குறித்து தெரிவித்துள்ளார்.

அப்போது ₹5 ஆயிரம் கொடுத்தால் சான்றிதழ் தருவேன் என விஏஓ குமரேசன் கூறியுள்ளார். இறுதியாக ₹4,500 கேட்டுள்ளார். இதையடுத்து தினேஷ்குமார், சேலம் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசில் புகார் கொடுத்தார். கடந்த 2ம் தேதி, லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகளின் ஆலோசனைபடி, ரசாயனம் தடவிய ₹4500ஐ கொடுத்தபோது, லஞ்ச ஒழிப்பு போலீசார் அவரை கைது செய்ய சுற்றி வளைத்தனர். இதனால் சுதாரித்துக்கொண்ட குமரேசன், லஞ்ச பணத்தை திடீரென வாயில்போட்டு மென்று விழுங்கினார்.

ஆனால் அந்த பணம் அவரது தொண்டையில் சிக்கிக்கொண்டது. உடனே அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று தொண்டையில் சிக்கிய பணத்தைவெளியேஎடுத்துள்ளனர். இதனை வீடியோவாக லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் பதிவு செய்துகொண்டுள்ளனர். பிறகு தான், விசாரணை நடத்தி அவரை சிறையில் அடைத்துள்ளனர். இந்த தகவல் வருவாய்த்துறை அலுவலர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே லஞ்ச வழக்கில் கைதான விஏஓ குமரேசன் மீது துறை ரீதியான நடவடிக்கையாக அவரை சஸ்பெண்ட் செய்துள்ளனர்.

### ₹25 ஆயிரம் லஞ்சம் வாங்கிய தாசில்தார் கைது

கோவை பெரியநாயக்கன்பாளையம் பகுதியை அடுத்த நாயக்கன்பாளையத்தை சேர்ந்தவர் சின்னராஜ் (61). இவர் ஊராட்சி துணை தலைவராக இருக்கிறார். இவர் கோவை லஞ்ச ஒழிப்பு போலீசில் ஒரு புகார் மனு அளித்தார். இந்த மனுவில், "பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள இந்திரா காந்தி வணிக வளாகத்தில் உள்ள கடைகளை ஏலம் விட அதிகாரிகள் முடிவு செய்தனர். இந்த ஏலத்தில் பங்கேற்க நான் முடிவு செய்தேன். இதையடுத்து ரூ.5 லட்சத்திற்கான கடனளிப்பு சான்றிதழ் வழங்கக்கோரி வருவாய் துறையிடம் விண்ணப்பித்தேன்.

இதையடுத்து நான் கோவை வடக்கு தாசில்தார் கோகிலாமணியை சந்தித்து சான்றிதழ் வழங்கும்படி கோரினேன். அப்போது, அவர் ரூ.35 ஆயிரம் லஞ்சம் வழங்கினால்தான் சான்றிதழ் அளிக்க முடியும் என கூறினார்.

எனவே, இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கூறியிருந்தார். புகார் மனுவை பெற்றுக்கொண்ட லஞ்ச ஒழிப்பு போலீசார், சின்னராஜிடம் ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை வழங்கினர். இதையடுத்து சின்னராஜ் நேற்று காலை கோவை வடக்கு தாசில்தார் கோகிலாமணியை சந்தித்து ரூ.25 ஆயிரத்தை வழங்கினார்.

அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும், களவுமாக தாசில்தார் கோகிலாமணியை பிடித்து கைது செய்தனர்.

Sat, 05 February 2022

22:51 | 0.0KB/s

## கியாஸ் சிலிண்டருக்கு ரூ.30 கூடுதலாக தராததால் திருப்பி எடுத்து சென்ற ஊழியர்

### ரூ.1 லட்சம் இழப்பீடு வழங்க நுகர்வோர் கோர்ட்டு தீர்ப்பு

திருப்பதி, ஜன.14—

ஆந்திர மாநிலம், அனந்தபுரத்தை சேர்ந்த நுகர்வோர் ஒருவர் கடந்த 2019—ம் ஆண்டு அக்டோபர் 7—ந் தேதி அங்குள்ள கியாஸ் ஏஜென்சியில் சிலிண்டர் பதிவு செய்து இருந்தார்.

**கியாஸ் சிலிண்டர்**

கியாஸ் ஏஜென்சியில் வேலை செய்யும் ஊழியர் சிலிண்டரை நுகர்வோர் வீட்டிற்கு கொண்டு வந்தார். அப்போது ஊழியர் கியாஸ் விலையை விட ரூ.30 கூடுதலாக கொடுக்க வேண்டும் என நுகர்வோரிடம் கேட்டார்.

**நுகர்வோர் கோர்ட்டில் புகார்**

அதற்கு நுகர்வோர் ரூ.30 கூடுதலாக தர முடியாது என கூறியதால் ஊழியர் மீண்டும் கியாஸ் சிலிண்டரை ஏஜென்சிக்கு கொண்டு சென்றார்.

இதனால் பாதிக்கப்பட்ட நுகர்வோர் இது குறித்து நுகர்வோர் குடிமை பொருள் வழங்கல் அலுவலரிடம் புகார் தெரிவித்தார். அங்கு இருந்த அதிகாரிகள் கூடுதல் கட்டணம் செலுத்தினால் மட்டுமே ஏஜென்சியிலிருந்து சிலிண்டர் வழங்கப்படும் என கூறி வேறு ஒரு ஏஜென்சிக்கு நுகர்வோர் பெயரை மாற்றினார்.

இதனால் ஒரு வாரத்திற்கு மேல் கியாஸ் சிலிண்டர் இல்லாமல் சமையல் செய்ய முடியாமல் அவதி அடைந்த நுகர்வோர் இது குறித்து நுகர்வோர் ஆணையத்தில் புகார் செய்தார். நுகர்வோர் ஆணைய உறுப்பினர் ஸ்ரீலதா விசாரணை நடத்திய போது, நுகர்வோரிடம் கூடுதல் பணம் கேட்ட ஊழியரை வேலையில் இருந்து நீக்கி விட்டதால் வழக்கை கைவிட வேண்டுமென தெரிவித்தனர்.

**ரூ.1 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவு**

கடந்த 3 ஆண்டுகளாக நடைபெற்று வந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பில் நுகர்வோரிடம் சிலிண்டர் விலை விட கூடுதலாக பணம் கேட்டது உங்கள் ஏஜென்சியை சேர்ந்த ஊழியர்.

அதனால் அவர் செய்த குற்றத்திற்கு நீங்களே பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.1 லட்சம் வழங்க நுகர்வோர் ஆணைய உறுப்பினர் ஸ்ரீலதா உத்தரவு பிறப்பித்தார்.


இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

நேர்மை நெறி- பிப்ரவரி 2023


| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |
| --- | --- |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20

## மத்திய அரசு பட்ஜெட் (2023-24)




-----------------------------------------------------------------




# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின்

**திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர்: ஜி கோவிந்தசாமி:**

**Permitted to Posting 7th to 13th**
**Posted at Patrika Channel**
**(Egmore RMS/1) on 13 Feb2023**
**Due to corona published online)**

**ஞாங்கர் மாய்ந்தனள் மட்டந்தை**

**இன்னும் வாழ்தல் என் இதன் பண்பே!**

*பெறுநர்*

I
F UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்! இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!